30.10.2025 **OS.No. 118 / 2014**

**பி.வா.சா. 1 பெயர்: வெங்கடேசன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி நாயுடு**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை: ( வாதிகள் தரப்பில் )**

நான் Auto mobile Engineering படித்துள்ளேன். நான் RTO ஆக பணி புரிந்து 2003 அல்லது 2024 ல் ஓய்வு பெற்றுள்ளேன். வாதிகள் எந்தஎந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து மூக்கம்பட்டி கிராம சர்வே எண்கள் 177, 178, 181, 182, 183, 184 ஆகிய சர்வே எண்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்று மேற்படி சர்வே எண்களுக்கு உரியது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.18 ஆகும். 4 மற்றும் 5 ம் வாதிகள் எங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் அ.வ.எண் 22/2014 என்ற வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தரப்பில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சி வா.சா.ஆ. 19 ஆகும். இந்த வழக்கில் என்ன சங்கதிகளை கூறி வழக்கு நடத்திகிறேனோ அதே சங்கதிகளை தான் மேற்படி அ.வ.எண் 22/14 ல் கூறியிருந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துகளையும் மற்றும் இதர சொத்துகளையும் பொருத்து ஆதியில் சேக்உஷைன் சாய்பு மற்றும் அவரது 4 மகன்கள் ஆன சேக் இஸ்மாயில் சாய்பு , அகமது பாஷா, குலாப்ஜான் சாய்பு மற்றும் அமீர்ஜான் சாய்பு ஆகியோர்களிடையே 02.11.1970 ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ல் வழக்கு சொத்துகள் ஏ அட்டவணையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 1 ல் ஏ அட்டவணை சொத்தை மேற்படி சேக் உஷைன் சாய்பு அவரது ஆய்வு வரைக்கும் சர்வ சுகந்திரமாக ஆண்டு அனுபவதித்து கொள்ள வேண்டும் என்றும் அவரது ஆயுளுக்கு பின்பு அச்சொத்துகள் ஏதேனும் மீதி இருந்தால் அதை அவரது 4 மகன்களும் சமமாக அடைந்து கொள்ள வேண்டும் என ஒரு குறிப்பான நிபந்தனை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்பு அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட 17 ம் பிரதிவாதியும், அவரது தந்தை சேக்உஷேன் சாய்பு என்பவரும் 02.12.1980 ல் பாக அட்டவணை ஏ சொத்தில் அவர்களுக்கு உரிய உரிமையை அகமத்பாஷா, குலாப்ஜான் மற்றும் அமீர்ஜான் ஆகியோர்களுக்கு விடுதலை பத்திரம் மூலம் விடுதலை கொடுத்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது சட்டபடி செல்லக்கூடியது அல்ல. மேற்படி பாக விடுதலை பத்திரம் நடைமுறைக்கு வந்து ஏ அட்டவணை சொத்தை மேற்படி மூவரும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற நாள் முதல் நான் அனுபவம் செய்து வருகிறேன். எனது மனைவிக்கு கிரையம் கொடுத்ததாக கூறுவது யார் என்றால் அகமது பாஷா மற்றும் அவரது மகன்கள்

கொடுத்தார்கள். மேற்படி எனது மனைவி பெற்ற கிரைய பத்திரங்களில் குலாப்ஜான் வாரிசுகளும், அமீர்ஜான் என்பவரும் தரப்பினர் இல்லை என்றாலும் அவர்கள் கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றாலும் சரிதான். மேற்படி 2 பத்திரங்கள் ஏற்பட்ட விவரம் மேற்படி குலாப்ஜான் வாரிசுகளும், அமீர்ஜான் என்பவருக்கும் தெரியாது என்றால் சரிதான். நான் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்ததால் போக்குவரத்து விதிகளும் இதர சட்ட விதிகளும் தெரியும் என்றால் போக்குவரத்து சட்டவிதிகள் மட்டுமே தெரியும். பொதுவாக சொத்தை வாங்கும்போது அச்சொத்தில் மூல ஆவணம் யார் பெயரில் உள்ளது என்பது குறித்து பரீசிலித்து பின்பு தான் வாங்குவார்கள் என்றால் சரிதான். நானும் எனது மனைவியும் கிரையம் பெற்றதாக கூறும் சொத்திற்கு கிரையம் பெறுவதற்குமுன்பு அவ்வாறு மூல ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்று பார்த்தோமோ என்றால் பார்த்தோம். அவ்வாறு என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து சர்வே எண்களுக்கான வில்லங்க சான்றில் 02.11.1970 தேதியிட்ட பாக பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு சொத்து 5 பேர் பெயரில் சொத்து உள்ள நிலையில் அகமத்பாஷா இடம் மட்டும் வாங்கியதற்கான காரணம் என்ன என்றால் மற்றவர்கள் அவருக்கு பவர் கொடுத்துவிட்டார்கள். எங்களது கிரைய ஆவணமான வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களை அகமதுபாஷா அவரதுக்காகவும், இதர மூன்று சகோதரருக்காவும் தான் எழுதி கொடுத்துள்ளார். அவ்வாறு நான் குறிப்பிடுவது கிரைய பத்திரத்தில் வாசகங்கள் ஏதும் இல்லை என்றாலும் எதிருரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் வாசங்கள் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு அகமதுபாஷா அவருக்கு முழு பாத்தியம் இல்லாத சொத்துகளை கிரையம் கொடுத்தது சம்பந்தமாக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே வழக்கு சொத்துக்கள் குலோப்ஜான் வாரிசுகள் மற்றும் அமீர்ஜான் ஆகியோர்களுக்கு உரிமை உள்ளது தெரிந்தே நானும் அகமது பாஷாவும் சேர்ந்து அவர்களது பங்கு உரிமையை ஏமாற்ற வேண்டி வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களை ஏறபடுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் 4 கிரைய ஆவணங்கள் எழுதி பெறுவதற்கு முன்பாக வழக்கு சொத்திகளில் எந்த ஒரு சிறு பகுதியையும் முழு பாத்தியமும் இருப்பதற்கான அகமது பாஷா பெயரிலோ அல்லது அவரது மகன்கள் பெயரிலோ எந்த ஒரு ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். உஷேன் சாய்பு இதர வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால் அவசியமான தரப்பினர் சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்ற குறிப்பிட்ட நிலையில் அவ்வாறு சேர்க்கப்பட வேண்டிய வாரிசுகள் பெயர் மற்றும் விவரங்கள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.3 மற்றும் 4 கிரைய ஆவணங்கள் எவ்வித மறுபயனும் இல்லாமல் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி

ஆவணங்கள் இன்று வரை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற பெயர் விவரம் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறான நிருவனம் நடைமுறையில் இல்லை என்றாலும் அந்த ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயார்செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சொத்து வாங்கும்போது வாங்குபவரே விழித்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி வில்லங்க சான்று உரிய பதிவு இருந்தும் அதை மீறி நான் கிரையம் பெற்றுள்ளதாக கூறும் நிலையில் நான் நல்ல எண்ணத்தில் பேரில் உரிய மறு பயனுக்காக வாங்கியவராக கருதபட மாட்டேன் என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் வேறு இதர சொத்துகளையும் சேர்க்க வேண்டும் என்று கூறியுள்ள நிலையில்அவ்வாறு சேர்க்கப்பட வேண்டிய சொத்துக்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் வாதிகள் மற்றும் 1 முதல் 9 மற்றும் 14 முதல் 16 வரை உள்ள பிரதிவாதிகளுக்கு பங்கு உரிமை உள்ள கூட்டு சொத்து என்றாலும் உரிய தரப்பினரை சேர்த்து நான் கிரையம் பெறாததால் நாங்கள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியது இல்லை என்றாலும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு சட்ட முறைப்படி கிடைக்க வேண்டிய பங்கு உரிமைகளை ஏமாற்ற வேண்டி ஆவணம் ஏற்படுத்தி வீண் வியாஜ்ஜியம் செய்து வருவதால் வாதிகளின் செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (17 ம் பிரிதிவாதி தரப்பில்)**

சேக்உஷைன் சாய்பு மற்றும் அவரது 4 மகன்கள் ஆன சேக் இஸ்மாயில் சாய்பு, அகமது பாஷா, குலாப்ஜான் சாய்பு மற்றும் அமீர்ஜான் சாய்பு ஆகியோர்களிடையே 02.11.1970 ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.3 ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3 ல் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சேக்உஷைன் சாய்பு க்கு 7 மனைவிகள் இருந்தார்கள் என்றும் 500 ஏக்கர் நிலம் இருந்ததாக கூறும் விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ. 3 ல் ஏ அட்டவணை சொத்தை மேற்படி சேக் உஷைன் சாய்பு அவரது ஆய்வு வரைக்கும் சர்வ சுகந்திரமாக ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டும் என்றும் அவரது ஆயுளுக்கு பின்பு அச்சொத்துகள் ஏதேனும் மீதி இருந்தால் அதை அவரது 4 மகன்களும் சமமாக அடைந்து கொள்ள வேண்டும் என ஒரு குறிப்பான நிபந்தனை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் 17 ம் பிரதிவாதி சேக்இஸ்மாயின் சாய்புக்கு 1/4 பாகம் பாத்தியம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 02.12.1980 ல் 17 ம் பிரதிவாதியும், அவரது தந்தை சேக்உஷேன் சாய்பு என்பவரும் பாக

அட்டவணை ஏ சொத்தில் அவர்களுக்கு உரிய உரிமையை அகமத்பாஷா , குலாப்ஜான் மற்றும் அமீர்ஜான் ஆகியோர்களுக்கு விடுதலை பத்திரம் மூலம் விடுதலை கொடுத்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது சட்டபடி செல்லக்கூடியது அல்ல. வழக்கு சொத்தில் வாதிகள் மற்றும் 1 முதல் 9 மற்றும் 14 முதல் 17 வரை உள்ள பிரதிவாதிகளுக்கு பங்கு உரிமை உள்ள கூட்டு சொத்து என்றாலும் உரிய தரப்பினரை சேர்த்து நான் கிரையம் பெறாததால் நாங்கள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியது இல்லை என்றாலும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துகளில் வாதிகள் மற்றும் 1 முதல் 9 மற்றும் 14 முதல் 17 வரை உள்ளவர்கள் தற்போது வரை கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 17ம் பிரதிவாதி தகப்பனார் சேக் உஷைன் சாய்பு இறந்த நாள் முதல் தற்போது வரை அவரது வாரிசுகள் கூட்டு குடும்ப அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எனது மனைவி பெற்ற கிரைய பத்திரங்களில் குலாப்ஜான் வாரிசுகளும், அமீர்ஜான் மற்றும் சேக்இஸ்மாயில் சாய்பு என்பவரும் தரப்பினர் இல்லை என்றாலும் அவர்கள் கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றாலும் சரிதான். மேற்படி 2 பத்திரங்கள் ஏற்பட்ட விவரம் மேற்படி குலாப்ஜான் வாரிசுகளும், அமீர்ஜான் மற்றும் சேக்இஸ்மாயில் சாய்பு என்பவருக்கும் தெரியாது என்றால் சரிதான். சேக்இஸ்மாயில் சாய்புவிடம் இருந்து நானும் எனது மனைவியும் எந்த வித கிரையமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற தேதி முதல் வழக்கு சொத்துகளில் தனிப்பட்ட சுவாதீனத்தில் நான் இருந்தது இல்லை என்றாலும் அதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் உரிய தரப்பினரிடம் கிரையம் பெறாததால் நாங்கள் பெற்ற கிரையம் ஆவணங்கள் செல்லக்கூடியது இல்லை என்றாலும் அதன் மூலமாக எங்களுக்கு எந்த ஒரு உரிமையும் அனுபவமும் ஏறபடவில்லை என்றால் சரியல்ல. வழக்குசொத்துகளில் 17 ம் பிரதிவாதிக்கு 1/4 ல் பாக பாத்தியம் அடைய உரிமை உடையவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி

ஊத்தங்கரை.